
02.11.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

# கடலோர தமிழகம், புதுச்சேரியில் மழை பெய்ய வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்




**சென்னை:** அடுத்த 24 மணி நேரத்தில் கடலோர தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலச்சந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது, தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் கடலோர தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இடியுடன் கூடிய மழை பெய்யும். உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னையில் மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாபநாசம் அணைப் பகுதியில் 157 மி.மீ. மழை: நீர்மட்டம் உயர்வு

திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம் அணை, பாபநாசம் கீழ் அணைப் பகுதியில் அதிகபட்சம் 157 மி.மீ. மழை பதிவானது. அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்ததை அடுத்துஅடவிநயினார் அணையின் நீர்மட்டம் 4 அடி உயர்ந்துள்ளது.

மேற்குக் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் மழை பெய்து வருகிறது. செவ்வாய்க்கிழமை காலை 8 மணியுடன்முடிவடைந்த 24 மணி நேரத்தில் அணைகள் மற்றும் பிற இடங்களில் பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை-77, பாபநாசம் கீழ் அணை-80, சேர்வலாறு அணை-54, மணிமுத்தாறு அணை-2, ராமநதி அணை-8, கருப்பாநதி அணை-23, குண்டாறு அணை-34, அடவிநயினார் அணை-2, நம்பியாறு அணை-16, திருநெல்வேலி-13, பாளையங்கோட்டை-20, நான்குனேரி-1, ராதாபுரம்-10, சேரன்மகாதேவி-2.6, அம்பாசமுத்திரம்-5.4, கன்னடியன் அணைக்கட்டு-13.6, ஆலங்குளம்- 63, தென்காசி-46.8, செங்கோட்டை-29,ஆய்க்குடி-10.2, சிவகிரி-47. தூத்துக்குடி மாவட்டத்தில் திருச்செந்தூர்-10, சாத்தான்குளம்-15, காயல்பட்டினம்-5, எட்டயபுரம்-2, கயத்தாறு-10.

2 தினங்களாக நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை பெய்து வருவதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

நீர்மட்டம் உயர்வு: பாபநாசம் அணை நீர்மட்டம் 23.30 அடி, சேர்வலாறு அணை-50.10 அடி, மணிமுத்தாறு அணை-34.20 அடி, கடனாநதி, ராமநதி அணைகளின் நீர்மட்டம் தலா 25 அடி, கருப்பாநதிஅணை-2.30 அடி உயர்ந்து 28.22 அடி,

குண்டாறு அணை நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 19.12 அடி, அடவிநயினார் அணை நீர்மட்டம் 4 அடி உயர்ந்து 26 அடி, வடக்குப் பச்சையாறு அணை- 2 அடி, நம்பியாறு அணை-8.96 அடி, கொடுமுடியாறு அணை- 2 அடியாக இருந்தது. நீர்ப்பிடிப்புப் பகுதியில் இருந்து அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில் பாபநாசம் அகஸ்தியர் அருவி, மணிமுத்தாறு அருவிகளிலும் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பயிர் காப்பீடு திட்டத்தில் 4,300 பேர் பதிவு

ஈரோடு: புதிய பயிர் காப்பீட்டு திட்டத்தில், ஈரோடு மாவட்டத்தில் இதுவரை, 4,300 பேர் காப்பீடு தொகை செலுத்தி பதிவு செய்துள்ளனர்.

மத்திய அரசு அறிவித்துள்ள புதிய பயிர் காப்பீட்டு திட்டத்தில், ஒரு ஏக்கர் நெல் வயலுக்கு, 390 ரூபாய் செலுத்தி, 26 ஆயிரம் ரூபாய்க்கு காப்பீடு பெறலாம். அதேபோல, மக்காசோளத்துக்கு, 315 ரூபாய், நிலக்கடலைக்கு, 337.50 ரூபாய், எள்- 157.50, கரும்பு - 1,392, பருத்தி - 1,050, வெங்காயம் - 1,600, வாழை - 3,450, மரவள்ளி - 1,450 ரூபாய் செலுத்தி காப்பீடு செய்யலாம். இக்காப்பீட்டை, விதைக்க முடியாத நிலை, விதைப்பு அல்லது நடவு பொய்த்தல், அறுவடைக்கு முன், பின் ஏற்படும் மகசூல் இழப்பு ஆகிய மூன்று நிலைகளாக காப்பீடு செய்யலாம். ஈரோடு மாவட்டத்தில் ஆண்டுக்கு, 35 ஆயிரத்து, 500 ஹெக்டர் வரை நெல் சாகுபடியாகும். நடப்பாண்டு மழை இன்மை, அணையில் நீர் இல்லாததால், 560 ஹெக்டர் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், விதைக்க முடியாத நிலை மற்றும் விதைப்பு, நடவு பொய்த்தல் நிலையில், வங்கி கடன் பெறாத, 4,300 பேரும், வங்கி கடன் பெற்ற, 206 பேர் காப்பீடு செய்துள்ளனர். தற்போதைய நிலையில், அறுவடைக்கு முந்தைய மகசூல் இழப்புக்கு வரும், 30 வரை காப்பீடு செய்யலாம். ஒவ்வொரு பயிருக்கும், குறிப்பிட்ட நாட்களுக்குள் காப்பீடு செய்ய

விரும்புவோர், உடனடியாக காப்பீடு தொகையை செலுத்தி, இழப்பீட்டு தொகையை பெறலாம்.

## ஊடுபயிர் விளைச்சலில் லாபம் கூடலூர் விவசாயிகள் ஆர்வம்

கூடலூர் : கூடலூர் விவசாயிகள், தேயிலை விவசாயத்துக்கு மத்தியில், ஊடுபயிராக, அவரைக்காய் விளைவித்து வருகின்றனர்.

கூடலூர் பகுதி விவசாயிகள், தேயிலையை தவிர, பீன்ஸ், பஜ்ஜிமிளகாய், பாகற்காய், பயறு, பூசணிகாய், முள்ளங்கி, நுல்கோல் உட்பட பல்வேறு விளைபொருட்களை, ஊடுபயிராக உற்பத்தி செய்து வருகின்றனர்.

தற்போது, பெரும்பாலான வீடுகளில், அவரைக்காய் பயிரிட அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விவசாயிகள் கூறுகையில், 'தற்போது, கூடலுாரில் பீன்ஸ், பஜ்ஜிமிளகாய், அவரைக்காய் ஆகியவற்றிற்கு நல்ல விலை கிடைப்பதால், அவற்றை, அதிகளவில் ஊடுபயிராக பயிரிட துவங்கியுள்ளோம்' என்றனர்.

## பரவலாக பெய்யும் பருவமழை உரம் இடும் பணியில் விவசாயிகள்

மஞ்சூர் : மஞ்சூரில் பரவலாக பெய்யும் மழையால், தேயிலை தோட்டங்களுக்கு உரம் இடும் பணியில், விவசாயிகள் ஈடுபட துவங்கி உள்ளனர்.

மஞ்சூர் பகுதிகளில், 4,000 எக்டரில் தேயிலை விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடப்பாண்டு துவக்கத்திலிருந்து போதிய மழை இல்லாததால், தேயிலை செடிகள் கருகும் நிலையில், பசுந்தேயிலை மகசூலும், கடந்தாண்டை காட்டிலும் பல மடங்கு குறைந்தது.

கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளிலும் எதிர்பார்த்த அளவு பசுந்தேயிலை கொள்முதல் இல்லாததால், செலவினங்களை தாக்கு பிடிக்க முடியாமல், விவசாயிகள் திணறி வந்தனர்.

இதனால், தோட்டங்களை பராமரிக்க முடியாமல், ெவளி யிடங்களில், கடன் பெற்று பூச்சி கொல்லி மருந்துகளை வாங்கி பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மேலும், மழைக்காக பூஜைகளையும் செய்து வந்தனர்.

இந்நிலையில், வட கிழக்கு பருவமழை துவக்கியுள்ள நிலையில், தேயிலை தோட்டங்களுக்கும் ஏற்ற சீதோஷ்ண நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் தேயிலை தோட்டங்களை உரமிட்டு பராமரிக்க துவங்கி உள்ளனர்.

சிறு தேயிலை விவசாய சங்க உறுப்பினர் ரமேஷ் கூறுகையில்," மழை இல்லாததால் தேயிலை தோட்டங்களை உரமிட்டு பராமரிப்பதில் பிரச்னை ஏற்பட்டு நஷ்டம் ஏற்பட்டது. தற்போது துவங்கியுள்ள பருவமழை தொடரும் பட்சத்தில், தோட்டங்களை உரமிட்டு பராமரித்தால், பசுந்தேயிலை மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது," என்றார்.

## கொடைக்கானலில் மழை எதிரொலி பழநி அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

பழநி: கொடைக்கானல், பழநி பகுதியில் மழை பெய்ததால் குதிரையாறு, பாலாறு-பொருந்தலாறு, வரதமாநதி அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயரத்துவங்கி உள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர் பழநி, கொடைக்கானல் பகுதியில் தொடர் மழை இல்லாததால், பழநி மற்றும் கிராமப் புறங்களின் குடிநீர், விவசாய பணிகளுக்கு ஆதாரமான மூன்று அணைகளும் வறண்டு கிடந்தன.

இந்நிலையில் நேற்று முன் தினம் கொடைக்கானல், பழநி பகுதியில் பெய்த மழையால் அணைகளுக்கு தண்ணீர் வரத்து துவங்கியுள்ளது. இதனால் அணைகளின் நீர்மட்டம் உயந்து வருகிறது.

நேற்றைய நிலவரம்: வரதமாநதி அணைக்கு வினாடிக்கு 93 கனஅடி தண்ணீர் வருகிறது. இரண்டு கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 34அடி(மொத்தம் 67 அடி). குதிரையாறு அணைக்கு 41கனஅடி நீர்வரத்து உள்ளது. மூன்று கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது, நீர்மட்டம் 37அடி (மொத்தம் 80 அடி). பாலாறு-

பொருந்தலாறு அணைக்கு வினாடிக்கு 71கனஅடி நீர்வரத்து உள்ளது. 8கனஅடி வெளியேற்றப்படுகிறது, நீர்மட்டம் 24அடியாக (மொத்தம் 65அடி) உள்ளது.

## ஒரு கிலோ தக்காளி ரூ.1.40

ஒட்டன்சத்திரம்: ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் தக்காளி விலை சரிவடைந்து ஒரு கிலோ ரூ.1.40 க்கு விற்றதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டன்சத்திரம் பகுதிகளில் தக்காளி அதிகமாக சாகுபடியாகிறது. முன்பு நாட்டுக் தக்காளியை அதிகம் பயிரிட்ட விவசாயிகள் தற்போது ஒட்டு ரக தக்காளியில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

கடந்த சில நாட்களாக தக்காளி வரத்து அதிகரித்து வந்தது. இதனால் விலையும் சரிவடைந்து வந்தது. நேற்று முன்தினம் 14 கிலோ கொண்ட தக்காளி பெட்டி ரூ.50 க்கு விற்றது. இதன் விலை நேற்று மேலும் சரிவடைந்து பெட்டி ரூ,20க்கு விற்றது. ஒரு கிலோ தக்காளியின் நேற்றைய விலை ரூ.1.40. இந்த விலையானது விவசாயிகள் பறிக்கும் செலவிற்கு கூட கட்டுப்படியாகாது.

நடவு, பராமரிப்பு செலவு, வேன் வாடகை, சுங்கம், கமிஷன் என மார்க்கெட்டிற்கு கொண்டு வந்து அதனை விற்க ஒரு பெட்டிக்கு ரூ.22 செலவாகிறது. தற்போது விற்கும் விலை பெட்டிக்கு ரூ.20தான் என்பதால், தக்காளியை விற்பனை செய்ய விவசாயிகள் தங்கள் கையிலிருந்துதான் ரூ.2 கொடுக்க வேண்டும். இதனால் விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.

கமிஷன்கடை உரிமையாளர் ஒருவர் கூறுகையில்,“ தக்காளி அதிகமாக விளைந்துள்ளதே விலை சரிவுக்கு காரணம்,” என்றார்.

## புதிய காபி அரவை இயந்திரங்கள் வருகை: ஓய்வெடுக்கும் கைரோதைகள்

தாண்டிக்குடி: நவீன காபி அரவை இயந்திரங்களின் வருகையை அடுத்து பழைய காபி பழம் அரைக்கும் கை ரோதைகள் தோட்டங்களில் ஓய்வெடுக்கின்றன.

தாண்டிக்குடி மலைப்பகுதியில் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பில் காபி விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. சிறு,குறு விவசாயிகள் சீசன் நேரத்தில் சேகரிக்கும் காபி பழங்களை கை ரோதைகள் பல்பர் உதவியுடன் பழங்களிலிருந்து காபி விதைகளை பிரித்து எடுப்பர். பின் அவற்றை சில நாட்கள் நொதிக்க வைத்து தண்ணீரில் காபி தளிர்கள் தயாராகும்.

இந்நடைமுறை அக்டோபர் முதல் டிசம்பர் வரை இருப்பது வழக்கம். இவ்வகை அரவை இயந்திரங்களை ஆட்கள்

இருவர் கரங்களை சுழற்றி கையாள்வர். இதற்கிடையே காலப்போக்கில் டீசல் மோட்டார், மின் மோட்டார் கொண்டு ரோதையில் பொறுத்தி பழங்களை பிரித்து எடுத்தனர். கடந்த சில ஆண்டுகளாக வாசலர் பல்பர் வருகையடுத்து காபி பழங்கள் எளிதில் அரைத்தும், நொதிக்க வைக்கப்படுகிறது.

மேலும் வளவளப்பை நீக்குவதற்கு பதில் உடனடியாக வாசர் மூலம் காபி தளிர்கள் பக்குவ நிலையில் கிடைக்கிறது. பின்புஉலர வைத்தால் போதும் விற்பனைக்கு தயார் என்ற நிலையில் நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள் வந்துள்ளன. இதையடுத்து துவக்க நிலையில் பயன்பட்ட கை ரோதைகள் ஓய்வெடுத்தும், பயனற்று பழைய இரும்பு கடைகளுக்கு செல்லும் நிலையில் உள்ளன.

இயந்திரங்களின் வருகையால் காபி பழ சீசனீல் மனிதர்களுக்கு உடல் உழைப்பு குறைந்து விட்டது. என்ன தான் நவீன

இயந்திரங்கள் வருகை தந்தாலும் கையால் சுழற்றி அரைக்கும் பணி உடலுக்கு ஆரோக்கியமும், புத்துணர்வையும் அளிக்கிறது என முன்னோடி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## மலைப்பகுதியில் பருவ மழை தீவிரம்

தாண்டிக்குடி: மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் தாண்டிக்குடி பகுதியில் பருவ மழை தீவிரமடைந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

வழக்கமாக அக்டோபர் 2ம் வாரத்தில் வடகிழக்கு பருவ மழை துவங்கும். நடப்பாண்டில் எதிர்பார்த்த மழை பெய்யாமல் விவசாயம் பாதித்தும், குடிநீருக்கு பற்றாக்குறையும் நிலவியது.

சுட்டெரிக்கும் வெயில், பனிப் பொழிவு, சூறைக்காற்று என வறண்ட வானிலை நீடித்தது. இதையடுத்து வானிலையை முன்கூட்டியே கணித்து விவசாயப் பணிகள் செய்ய முடியாமல் மகசூல் இழப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் மலைப்பகுதியில் விடிய, விடிய கனமழை பெய்தது. இதில் நீர்ப்பிடிப்பு பகுதியான தலையாறு, மருதாநதி, குடகனாறில் நீர்வரத்து அதிகரித்தது. நேற்று பகல் பொழுதில் விட்டு, விட்டு மிதமான மழை பெய்தது. தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. காற்றில் ஈரப்பதம் அதிகரித்து குளிர் நிலவியது. பருவ மழை துவங்கியுள்ளதால் விவசாயிகள் சுறுசுறுப்புடன் களப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## தக்காளி, முருங்கை விலை குறைவு

ஒட்டன்சத்திரம்: ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் தக்காளி கிலோ ரூ.3.50 க்கும், கரும்பு முருங்கை ரூ.33 க்கும் விற்றது.

ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் காய்கறிகள் அதிகமாக பயிரிடப்படுகிறது. குறிப்பாக தக்காளி மற்றும் முருங்கைக்காய் அதிகளவில் சாகுபடியாகிறது.

கடந்த சில நாட்களாக வரத்து அதிகமாக இருந்ததால் காய்கறி விலை குறைவாக இருந்தது. தீபாவளியை முன்னிட்டு மார்க்கெட்டில் காய்கறி வரத்து குறைவாக இருந்தது. இதனால் நேற்று முன்தினம் காய்கறி விலை திடீரென அதிகரித்தது. ஒரு கிலோ ரூ.45க்கு விற்ற கரும்பு முருங்கை ரூ.45 க்கு விற்றது. நேற்று ரூ.12 வரை குறைந்து ரூ.33 க்கு விற்றது.

இதேபோல் ரூ.30க்கு விற்ற செடிமுருங்கை ரூ.25க்கும், ரூ.20க்கு விற்ற மரம் முருங்கை ரூ.18க்கும் விற்றது. கடந்த வாரம் ஒரு கிலோ தக்காளி ரூ.5க்கும் மேல் விற்றது. நேற்று இதன் விலை சரிந்து ரூ.3.50 க்கு விற்றது.

## கரூரில் 40 மி.மீ., மழை: வேளாண் பணிகள் தீவிரம்

கரூர்: கரூர் மாவட்டத்தில், கரூர் நகரில் அதிகபட்சமாக, 40 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை துவங்கி உள்ளதால், கடந்த, இரண்டு நாட்களாக, கரூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்ந்து வருகிறது. நேற்று காலை, 8:00 மணி வரை, கரூரில் அதிகபட்சமாக, 40 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. மற்ற இடங்கில் பதிவான மழை அளவு விவரம் வருமாறு: அரவக்குறிச்சி, 8.20, க.பரமத்தி, 6.60, குளித்தலை, 3.00, மாயனூர், 3.00, அணைப்பாளையம், 12.00 மி.மீ., என, 76 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. இதன்படி, மாவட்டத்தில் சராசரி மழை அளவாக, 6.40 மி.மீட்டர் பதிவானது. இதனால், விவசாயிகள் வேளாண் பணிகளை தீவிரப்படுத்தி உள்ளனர். ஆனால், சாக்கடை கால்வாய் வசதி இல்லாததால், சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருகிறது. எனவே, சுகாதார பணிகளை தீவிரப்படுத்த கோரிக்கை எழுந்துள்ளது.

## சோளப்பயிர் உதிர்க்கும் பணியில் விவசாயிகள்

செல்லிபாளையம்: கரூர் அடுத்த சோமூர் பஞ்சாயத்து, செல்லிபாளையத்தில், ஆங்காங்கே சிலர் சோளப்பயிரை பயிரிட்டு வருகின்றனர். இதுகுறித்து, சோளப்பயிர் செய்யும் விவசாயிகள் கூறியதாவது: ஆண்டுதோறும் சித்திரையில் சோளம் பயிரிடுவோம். ஆடியில் அறுவடை செய்வோம். தண்ணீர் இருந்தால் நன்கு வளரும்; இல்லாவிட்டால் ஒரு சில மாதங்கள் கழித்துத்தான் வளர்ந்து அறுவடைக்கு வரும். தற்போது சோளப்பயிர் அறுவடை செய்து, சாலையில் போட்டு காய வைப்பதுடன், இவ்வழியே செல்லும் வாகனங்கள் செல்வதால் அதில் அடிபட்டு சோளம் உதிர்ந்து விடும். அதை தூற்றி, 100 கிலோ கொண்ட, ஒரு மூட்டை, 4,000 ரூபாய் வரை விற்கிறோம். அதிகளவில் சோளம் விளைவிக்கும் விவசாயிகள் மிஷின் மூலம் சோளத்தை பிரித்தெடுக்கின்றனர். மீதியுள்ள சோளத்தட்டுக்களை ஆடு, மாடுகளுக்கு தீவனமாக கொடுத்து விடுவோம். இருப்பினும் தண்ணீர் பற்றாக்குறை தான் பெரிய குறையாக உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## மல்லிகை, கனகாம்பரம் விலை உயர்வு

தேனி: மழை மற்றும் முகூர்த்தநாளை முன்னிட்டு தேனி மாவட்டத்தில் மல்லிகை, கனகாம்பரம் விலை உயர்ந்துள்ளது.

தேனி அதன் சுற்றுப்பகுதிகளான கொடுவிலார்பட்டி, வெங்கடாசலபுரம், அரப்படிதேவன்பட்டி, அல்லிநகரம், லட்சுமிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் மல்லிகை பூ சாகுபடி நடக்கிறது. சில நாட்களுக்கு முன் கொட்டி தீர்த்த மழையால் இது பெரிதும் பாதிக்கப்பட்டது. விளைச்சல் குறைவால் விலை இரு மடங்காக உயர்ந்தது. இதனால் பூ வியாபாரிகள் கொள்முதல் செய்வதில் தயக்கம் காட்டினர்.

இந்நிலையில் கடந்த வாரம் கிலோ ரூ. 250க்கு விற்ற மல்லிகை முகூர்த்தநாளை முன்னிட்டு 600, 200க்கு விற்ற கனகாம்பரம் 500, 250க்கு விற்ற பிச்சி 450 ஆக விலை உயர்ந்துள்ளது.

தேனி பூ வியாபாரி முருகேசன் கூறுகையில், “ சில நாட்களுக்கு முன் பெய்த மழையால் மல்லிகை சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டது. முகூர்த்தநாளை

முன்னிட்டு மல்லிகை, கனகாம்பரம் , பிச்சி உள்ளிட்ட பூக்களின் விலை உயர்ந்துள்ளது," என்றார்.

### மஞ்சள் ஏலம் ரத்து

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டையில், ஆர்.சி.எம்.எஸ். உள்பட, 17 தனியார் மஞ்சள் மண்டிகள் உள்ளன. வாரந்தோறும் செவ்வாய்கிழமை மஞ்சள் ஏலம் நடக்கும். சீசன் சமயத்தில், நாமகிரிப்பேட்டையில் மட்டும், 1.5 கோடி ரூபாய் அளவிற்கு மஞ்சள் விற்பனையாகிறது. இந்நிலையில், கடந்த சனிக்கிழமை தீபாவளி என்பதால், நேற்று, வியாபாரிகள் யாரும் வரவில்லை. எனவே, ஆர்.சி.எம்.எஸ். உள்பட, 17 தனியார் மண்டிகளிலும் ஏலம் ரத்து செய்யப்பட்டது.

### வெற்றிலை விலை உயர்வு

ப.வேலூர்: ப.வேலூர் ஏலச் சந்தையில் வெற்றிலையின் விலை உயர்ந்தது. ப.வேலூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அவை, ப.வேலூர் நான்கு சாலைப் பகுதியில் உள்ள ஏலச்சந்தைகளுக்கு கொண்டு வரப்படுகிறது. கடந்த வாரம் நடந்த ஏலத்தில், கற்பூரி வெற்றிலை முதல் ரகம், 104 கவுளி கொண்ட சுமை ஒன்று, 4,000 ரூபாய், இரண்டாவது ரகம், 2,300 ரூபாய்க்கும் ஏலம் போனது. வெள்ளைக்கொடி வெற்றிலை, முதல் ரகம், சுமை ஒன்று, 5,500 ரூபாய், இரண்டாவது ரகம், 3,500 ரூபாய்க்கும் ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில், கற்பூரி வெற்றிலை, முதல் ரகம், 4,500 ரூபாய், இரண்டாவது ரகம், 2,800 ரூபாய்க்கும் ஏலம் போனது. வெள்ளைக்கொடி வெற்றிலை, முதல் ரகம், 6,000 ரூபாய், இரண்டாவது ரகம், 4,000 ரூபாய்க்கும் ஏலம் போனது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## இடைப்பாடியில் 25 மூட்டை நிலக்கடலை □45 ஆயிரத்துக்கு ஏலம்

இடைப்பாடி: சேலம் மாவட்டம் கொங்கணாபுரத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நிலக்கடலை ஏலம் நடந்தது. வழக்கத்தைவிட நேற்று குறைந்த அளவே நிலக்கடலை மூட்டை வந்தது. கொங்கணாபுரம், தேவூர், குள்ளம்பட்டி, பூலாம்பட்டி, மலங்காடு, கோனேரிப்பட்டி, பூமனியூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 25 நிலக்கடலை மூட்டைகளை விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர். 60 கிலோ கொண்ட உலர்ந்த நிலக்கடலை மூட்டை □2 ஆயிரம் முதல் □2,800 வரை ஏலம் போனது. ஆனால் ஈரப்பத நிலக்கடலை மூட்டை வரத்து இல்லை. இதன்மூலம் 25 மூட்டை நிலக்கடலை □45 ஆயிரத்துக்கு விற்பனையானது. கடந்த ஏலத்தைவிட, உலர்ந்த நிலக்கடலை கிலோவுக்கு □2 முதல் □3 வரை கூடுதலாக விலைபோனது.

## புதன்சந்தையில் மாடுகளின் விலை உயர்வு

சேந்தமங்கலம்: புதன்சந்தை மாட்டுச்சந்தை திங்கள் இரவு முதல், செவ்வாய் மதியம் வரை கூடுவது வழக்கம். இங்கு மாடுகளை வாங்க கோவை, பொள்ளாச்சி, கேரளா, ஆந்திரா, கர்நாடகம் மற்றும் ஈரோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வருவது வழக்கம். இந்நிலையில் நேற்று கூடிய மாட்டுச்சந்தைக்கு ஏராளமான வியாபாரிகள் வந்திருந்தனர். ஆனால் தீபாவளி முடிந்தும், குறைவான எண்ணிக்கையிலேயே மாடுகள் விற்பனைக்கு வந்தது. இதனால் விலை உயர்ந்தது.

கடந்த வாரம் □20 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட இறைச்சி மாடு, இந்த வாரம் □24 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. தற்போது மழை பெய்து வருவதால் கறவைமாடு,

வளர்ப்பு கன்று தேவை அதிகரித்துள்ளது. கடந்த வாரம் □48 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கறவைமாடு இந்த வாரம் □49 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. மேலும், □13 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கன்றுக்குட்டி □14 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது.

**வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் முருங்கை சாகுபடி மதிப்பு கூட்டு பயிற்சி முகாம்**

தர்மபுரி: தர்மபுரி அருகே முருங்கை சாகுபடி மற்றும் மதிப்புக்கூட்டுதல் குறித்து பயிற்சி முகாம் நடந்தது. தர்மபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் கடகத்தூரில் முருங்கை சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டுதல் பயிற்சி முகாம், சிவிஆர் உணவு தயாரிப்பு துறை சார்பில் நடந்தது. வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசியர் இந்துமதி தலைமை வகித்தார். பயிற்சி முகாமில், முருங்கை சாகுபடிக்கான உகந்த மண் வகைகள், ரகங்கள், இடைவெளி, பராமரிப்பு மற்றும் கவாத்து செய்யும் முறை குறித்து விளக்கமளித்தனர்.

முகாமில், வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சண்முகம், முருங்கையில் அதிக பாதிப்பு ஏற்படுத்தும் பழ ஈ மற்றும் எரி புழுக்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து எடுத்துரைத்தார். மனையியல் துறை உதவி பேராசியரியர் ஜோதிலட்சுமி, முருங்கையின் பூ முதல் வேர் வரை உள்ள மருத்துவப் பயன்கள், முருங்கைக் கீரையில் உள்ள சத்துகள், பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டுதல் குறித்து விளக்கமளித்தார். மேலும், மதிப்புக் கூட்டுதலின் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு ஏற்படுத்தும் வகையில், கடகத்தூர் சிவிஆர் தொழில்பேட்டையில் உள்ள முருங்கைக் கீரை பதப்படுத்தும் தொழில்சாலைகளுக்கு விவசாயிகள் களப்பயணம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு, முருங்கைகீரை பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலையின் நிர்வாக இயக்குனர் விமலநாதன் மற்றும் ஜெயகிருஷ்ணன் ஆகியோர் முருங்கை கீரையை மதிப்பு கூட்டி விற்பனை மற்றும் ஏற்றுமதி செய்வது குறித்து பேசினர். இதில், முருங்கை சாகுபடி முன்னோடி விவசாயி சாமிக்கண்ணு மற்றும் விவசாயிகள், இளைஞர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் மீன் வளர்ப்பு செயல் விளக்க பயிற்சி

தர்மபுரி: பென்னாகரம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் விவசாயிகளுக்கு கூட்டின மீன் வளர்ப்பு செயல் விளக்கப்பயிற்சி அளிக்கப்பட்டது. தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் கூட்டின மீன் வளர்ப்பு செயல் விளக்கப்பயிற்சி பென்னாகரத்தில் நடந்தது. தர்மபுரி மாவட்ட மீன்வளத்துறை ஆய்வாளர் ஜனார்த்தனன் மீன் குஞ்சு இருப்பு செய்தல், கலவை தீவனம் வழங்குதல், மீன் அறுவடை செய்தல் பற்றி விரிவாக விளக்கம் அளித்தார். பயிற்சியில் உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் கிருஷ்ணமூர்த்தி, சார் ஆய்வாளர் அசினாபானு, மீன் வள உதவியாளர் சங்கர் மற்றொரு சங்கர் மற்றும் 30 விவசாயிகள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை, வட்டார தொழில்நுட்ப மேலாளர் சரவணன் செய்திருந்தார்.

## ரபி பருவ கொள்முதலுக்காக பருப்பு ஆதார விலை உயர்கிறது




புதுடெல்லி: பருப்பு, கோதுமை ஆகியவற்றுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு விரைவில் உயர்த்தி அறிவிக்க உள்ளது. பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலையை கட்டுப்படுத்த, மத்திய அரசு ஏஜென்சிகள் மூலம் உள்ளூர் விவசாயிகளிடம் கொள்முதல் செய்வதோடு, வெளிநாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்யப்படுகிறது. இந்நிலையில் எதிர்வரும்

ரபி பருவ கொள்முதலை கருத்தில் கொண்டு, பருப்பு வகைகளுக்கு குவின்டாலுக்கு □600 வரை உயர்த்தப்படலாம் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது பருப்பு வகைகளுக்கு குவின்டாலுக்கு □3,400 முதல் □3,500 வரை வழங்கப்படுகிறது. மசூர் மற்றும் கடலை பருப்புக்கு குறைந்தபட்ச ஆதார விலையாக □600 வரையிலும், கோதுமைக்கு நூறு ரூபாயும் உயர்த்துவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

இதுகுறித்து விவசாய அமைச்சகத்திடம் இருந்து பரிந்துரை வந்துள்ளது. பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் வழங்கப்படலாம். இதன்படி பருப்பு குவின்டாலுக்கு □4,000 ஆகவும், கோதுமை குவின்டாலுக்கு □1,625 ஆகவும் உயர்த்தப்பட வாய்ப்புகள் உள்ளன. உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவித்து, இறக்குமதியை கட்டுப்படுத்துவதோடு, விலை உயர்வை தடுக்கவும் இது உதவும் என்று மத்திய அரசு வட்டாரங்கள் கூறுகின்றன. இந்த ஆண்டு 20.75 மில்லியன் டன் பருப்பு உற்பத்திக்கு மத்திய அரசு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ரபி பருவ அறுவடையாக 13.5 மில்லியன் டன், 8.7 டன் காரீப் பருவத்தில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கிருஷ்ணகிரி, சூளகிரியில் கொட்டித் தீர்த்தது கனமழை : விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மற்றும் சூளகிரி சுற்றுவட்டார பகுதியில் நேற்று மாலை திடீர் மழை பெய்ததால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களாக போதிய மழையில்லாததால் சூளகிரி, தேன்கனிக்கோட்டை, ஓசூர், காவேரிப்பட்டணம், போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயிகள் பயிரிட்டிருந்த ராகி, துவரை, நிலக்கடலை, காய்கறி உள்ளிட்ட பயிர்கள் வறட்சியால் கருகியதால் விவசாயிகள் கவலையடைந்தனர்.

இந்நிலையில் பருவநிலை விரைவில் தொடங்கும் என வானிலை மையம் அறிவித்தது. கடந்த இரண்டு நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. இந்நிலையில் நேற்று மாலை 4.30 மணியளவில் சூளகிரி

சுற்றுவட்டார பகுதியில் திடீர் மழை பெய்தது. தொடர்ந்து கிருஷ்ணகிரியில மழை ெபய்தது. சுமார் அரை மணி நேரம் கனமழை பெய்தது.

இதனால் கிருஷ்ணகிரி நகர் மற்றும் புறநகர் பகுதிகள், சூளகிரி அருகே உள்ள சென்னபள்ளி, அலகுபாவி, குராக்கனபள்ளி ஆகிய பகுதியில் மழைநீர் சாலையில் ஓடியது. இதனால் கிருஷ்ணகிரி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்கள் முகப்பு விளக்கு எரியவிட்டு ஊர்ந்து சென்றன. இந்த திடீர் மழையால் வெப்பம் தனிந்து, குளிர்ச்சியான சீதோஷண நிலை காணப்பட்டதால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர். இரண்டு மாதத்திற்கு முன்பு, இந்த மழை பெய்திருந்தால் ஓரளவுக்கு கடலை செடிகளை காப்பாற்றி இருக்கலாம் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## பொங்கல் பண்டிகைக்காக பஞ்சாபில் இருந்து ரயிலில் வந்த 2500 டன் பச்சரிசி

ஈரோடு, : பொங்கல் பண்டிகைக்கு தமிழக அரசு ஒவ்வொரு ரேஷன் கார்டுதாரர்களுக்கும் பொங்கல் பரிசாக இலவச பச்சரிசி வழங்கி வருகிறது. இதற்காக நேற்று காலை பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் இருந்து 2500 டன் பச்சரிசி மூட்டைகள் ஈரோடு ரயில் நிலையத்திற்கு வந்தடைந்தது. இந்த பச்சரிசி மூட்டைகள் உடனடியாக லாரிகளில் ஏற்றி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகத்தின் குடோன்களுக்கும், சிவிப் சப்ளை குடோன்களுக்கும் கொண்டு செல்லப்பட்டது. பொங்கல் பண்டிகைக்கு முன்பு அந்தந்த ரேஷன் கடைகளுக்கு பச்சரிசி அனுப்பி வைக்கப்பட்டு மக்களுக்கு விநியோகம் செய்யப்பட உள்ளதாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

## பருவமழை துவக்கம் சாகுபடியில் விவசாயிகள் தீவிரம்

கோவை : கோவை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த 3 நாட்களாக பரவலாக பெய்து வருகிறது. இதனால், கோவை தொண்டாமுத்தூர், கிணத்துக்கடவு, மேட்டுப்பாளையம், அன்னூர் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயிகள், தங்களது நிலத்தை பண்படுத்தி, காய்கறி விதைப்புகளில் ஈடுபட துவங்கியுள்ளனர். குறிப்பாக, கத்தரி, தக்காளி, பொரியல்தட்டை, வெண்டை, பீட்ரூட், முட்டைக்கோஸ், வெங்காயம் சாகுபடி இப்பகுதியில்

பெருமளவில் நடக்கும். இவை, வடகிழக்கு பருவ காலம் முடியும் நேரத்தில் மகசூல் அளிக்கும் விதத்தில் திட்டமிட்டு பணியாற்றி வருகின்றனர். சாகுபடிக்கு பெரும்பாலும் மழை நீரையே நம்பியுள்ளதால், பருவ மழையால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து, சாகுபடி காலம் முழுவதும் சமாளிக்கும் விதத்தில் பாசன நீர் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றனர். மழை 2 மாதம் தொடரும் என்பதால், சாகுபடிக்கு தேவையான தண்ணீர் முழுமையாக கிடைக்கும் என்கின்றனர் விவசாயிகள். விவசாய பணிகளில் தீவிரம் காட்டி வருவதால் மஞ்சள், மக்காச்சோளம் போன்ற விளை பொருட்களை ஒழுங்குமுறை விற்பனை கூடங்களுக்கு கொண்டுவருவதில் அடுத்த 2 வாரங்களுக்கு சுணக்கம் ஏற்படும் என தெரிகிறது.

## ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் 10 நாட்களுக்கு பிறகு மஞ்சள் வரத்து

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி ரகம் 140 குவின்டாலும், கிழங்கு ரகம் 20 குவின்டாலும் என மொத்தம் 160 குவின்டால் விற்பனையானது. சென்னனூர், கோயில்பாளையம், அன்னூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதை கோவை, பொள்ளாச்சி, பாலக்காடு பகுதியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். விலை விரலி மஞ்சள் குவின்டால் ரூ.8,115 முதல் ரூ.9.030 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.8,500. விற்பனை மதிப்பு ரூ.11.34 லட்சம். கிழங்கு மஞ்சள் குவின்டால் ரூ.8,009 முதல் ரூ.8,309 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.8,150. விற்பனை மதிப்பு ரூ.2.94 லட்சம். இரண்டு ரகமும் சேர்ந்து ரூ.13.14 லட்சத்திற்கு விற்றது. இது, கடந்த 20ம் தேதி நடந்த விற்பனையைவிட ரூ.1.14 லட்சம் குறைவாகும். எனினும், கடந்த 2 ஏலத்திற்கு மஞ்சள் விற்பனைக்கு வராத நிலையில், நேற்று விற்பனைக்கு வந்துள்ளதால் விலை கடந்த விற்பனையை காட்டிலும் விரலி ரகம் குவின்டாலுக்கு ரூ.400ம், கிழங்கு ரகம் ரூ.800ம் அதிகரித்தது.

## விலை உயர்வால் நீலகிரி பீட்ரூட் வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி

ஊட்டி, : நீலகிரியில் விளையும் பீட்ரூட் விலை உயர்ந்துள்ளதால் அறுவடையில் விவசாயிகள் மும்முரம் காட்டி வருகின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தப்படியாக மலை காய்கறி விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதிகளவில் உருளைக்கிழங்கு, கேரட், முட்டைகோஸ், பீட்ரூட் போன்ற காய்கறிகள் விவசாயம் செய்யப்படுகிறது. இங்கு விளையும் பீட்ரூட் அடர்த்தியான நிறம் மற்றும் சுைவயுள்ளதாக இருப்பதால் வெளி மாநிலங்களில் அதிக கிராக்கி உள்ளது. கடந்த மாதம் வரை பீட்ரூட்டிற்கு போதிய விலை கிடைக்கவில்லை.

கிலோ ஒன்றிற்கு ரூ.10 முதல் 20 வரையே கிடைத்து வந்தது.இதனால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. இதனால், பெரும்பாலான விவசாயிகள் அறுவடை செய்வதையே தவிர்த்து வந்தனர்.இந்நிலையில், கடந்த ஒரு வார காலமாக பீட்ரூட் விலை உயர்ந்துள்ளது. தற்போது கிலோ ஒன்றிற்கு ரூ.30 வரை கிடைக்கிறது. தரத்திற்கு ஏற்பட விலை கூடுதலாகவும் வழங்கப்படுகிறது. இதனால், நீலகிரி மாவட்டத்தில் உள்ள பீட்ரூட் விவசாயிகள், அறுவடை செய்வதில் மும்முரம் காட்டி வருகின்றனர்.

## 18ம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

ஊட்டி, : நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 18ம் தேதி காலை 10.30 மணிக்கு ஊட்டி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது. மாவட்ட விவசாயிகள் பொதுவான கோைாிக்கைகள் தவிர்த்து விவசாயம் சம்பந்தப்பட்ட நீர்பாசனம், இடுபொருட்கள் போன்ற கோரிக்கைகளை மட்டும் தோட்டக்கலை இணை இயக்குநர், தபால் பெட்டி எண் 72, ஊட்டி 643001 என்ற அலுவலக முகவரிக்கு தபால் அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம்.

## திருச்சி மாவட்டத்தில் சம்பா பருவத்துக்கு உரங்கள் இருப்பு

திருச்சி : சம்பா பருவத்துக்கு தேவையான உரங்கள் திருச்சி மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக்கடைகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண் துறை அதிகாரிகள் கூறியதாவது: திருச்சி மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 735.70 மி.மீட்டர். அக்டோபர் மாதம் முடிய இதுவரை பெய்துள்ள மழை அளவு 406.மி.மீட்டர். நடப்பாண்டு மாவட்டத்தில் இதுவரை 1,122 ஏக்கரில் முதல் முறையாக நேரடி நெல் விதைப்பு மூலம் சம்பா சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் 140 ஏக்கரில் ேநரடி நெல் விதைப்பு கருவி மூலம் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகள் பெற்று சாகுபடி செய்வதற்கு ஏதுவாக நெல் விதைக்கு கிலோ ஒன்றிற்கு ரூ.10 மான்யம் வீதம் இதுவரை 208.9 டன் திருச்சி மாவட்ட வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் மான்யம் வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பு பருவத்திற்கு தேவையான ஆடுதுறை 49, ஆடுதுறை 50, கோஆர் 50, குறைந்த வயது டைய கோ 51 ஆகிய நெல் ரகங்களின் ஆதார மற்றும் சான்று பெற்ற விதைகள் 298 டன் திருச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங் களிலும் இருப்பில் உள்ளது. நடப்பு பருவத்திற்கு தேவையான உரங்கள் யூரியா 8,892 டன்னும், டிஏபி 6,207 டன்னும், பொட்டாஷ் 6,534 டன் மற்றும் கூட்டுரம் 14,769 டன் உரங்கள் திருச்சி மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக்கடைகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்றனர்.

## ரூ.2.41 கோடியில் மதிப்பீட்டில் பசுமை குடில் நிழல் வலை கூடாரம்

திருச்சி : திருச்சி மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களுக்கு ரூ.2.41 கோடியில் பசுமை குடில், நிழல் வலைக் கூடாரம் அமைக்கப்பட்டு திட்டம் செயல்பட்டு வருகிறது. இதுகுறித்து தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறியதாவது: திருச்சி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் ேதசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின்

கீழ், பழமர செடிகள், பூச்செடிகள் மற்றும் நறுமணப்பயிர்கள் சாகுபடி செய்வதற்கும், நிலப்போர்வை, சிப்பம் கட்டும் அறை, பசுமை குடில் அமைத்தல் மற்றும் நிழல் வலைக் கூடாரம் அமைப்பதற்கும் ரூ.2.41 கோடிக்கு இலக்கு பெறப்பட்டு திட்டம் செயல்பட்டு வருகிறது.

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் 2016-17ல் வெங்காயத்தில் பரப்பு விரிவாக்கம், குறைந்த விலையில் வெங்காயம் சேமிப்பு கிடங்கு, தேனீ வளர்த்தல் அமைப்பதற்கு ரூ.1.83 கோடி நிதி பெறப்பட்டு திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. தேசிய நுண்ணீர் பாசன திட்டத் தில், தோட்டக்கலை பயிர்களுக்கு 766 எக்டேருக்கு இலக்கு 2016-17ம்ஆண்டு பெறப்பட்டு, நுண்ணீர் பாசன திட்டம் அமைக்கப்பட்டு வருகிறது. தேவைப்படும் விவசாயிகள் வட்டார தோட்டக்கலை அலுவலகத்தை அணுகி பதிவு செய்து கொள்ளலாம்.

பாரம்பரிய வேளாண் உற்பத்தி திட்டத்தின் கீழ், மருங்காபுரி வட்டாரத்தில் இயற்கை விவசாய முறையில் மாசாகுபடியை ஊக்குவிக்க ரூ.7.60லட்சத்திற்கு இலக்கு பெறப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு விவசாய குழு அமைக்கப்பட்டு பயிற்சிகள் நடை பெற்று வருகிறது. தோட்டக்கலை சார்ந்த திட்டங்களை பெற அருகில் உள்ள வட்டார தோட்டக் கலை உதவி இயக்குனர்களை அணுகி பயன்பெறலாம்.

## நெல் நாற்றில் உயிர் உர நேர்த்தி செயல்விளக்கம்

கடவூர்: பாலவிடுதியில் விவசாயிகளுக்கு நெல் நாற்றில் உயிர்உர நேர்த்தி செய்தி காட்டல் பயிற்சி நடந்தது. ஊரக வேளாண் அனுபவ திட்டத்தின் கீழ் துறையூர் இமயம் வேளாண் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில், வேளாண் கல்லூரி மாணவர் ராஜதுரை தலைமை வகித்தார். மாணவர்கள் சதீஸ்குமார், கபிலன், முரளி, அஸ்வின் பிரசாத், மகிபாரதி, அருண்பாண்டியன் ஆகியோர் விவசாயிகளுக்கு நெற் பயிரில் உயிர் உர நேர்த்தி தொடர்பான செயல்முறைகள் சம்மந்தமாக பயிற்சி அளித்தார். ராஜ்குமார் நன்றி கூறினார்.

**வலங்கைமான் பகுதியில் மிதமான மழை காரணமாக நேரடி விதைப்பு பயிர்கள் முளைக்க துவங்கின**

வலங்கைமான்: வலங்கைமான் பகுதியில் பெய்த மழை காரணமாக சம்பா நேரடி விதைப்பு பயிர்கள் முளைக்க துவங்கி உள்ளன. வலங்கைமான் தாலுகாவில் நடப்பு சம்பா பருவத்துக்கு 8,600 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கபட்டுள்ளது. தற்போது சுமார் 8 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நேரடி நெல்விதைப்பு செய்யப்பட்டுள்ளது. 3,500 ஏக்கரில் கைநடவு செய்யும் விதமாக விதை விடபட்டுள்ளது. மேலும் 2,800 ஏக்கரில் இயந்திர நடவு மேற்கொள்வதற்கும் |திட்டமிடப்பட்டுள்ளது.

டெல்டா மாவட்டங்களின் வாய்க்கால்களை பொதுப்பணித்துறை முறையாக தூர்வாராததால் மேட்டூர் அணை பாசனத்திற்கு திறக்கப்பட்டும் வாய்க்கால்களில் முறையாக தண்ணீர் வரவில்லை. இதன் காரணமாக வலங்கைமான் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் நேரடி விதைப்பு செய்யப்பட்டு சுமார் 50 நாட்களை கடந்த நெற்பயிர்கள் கருக தொடங்கியது.

இந்நிலையில் வலங்கைமான் பகுதியில் வடகிழக்கு பருவமழை முறையே கடந்த 3 தினங்களில் சுமார் 12 செ.மீ அளவிற்கு பெய்தது. இதன் காரணமாக நேரடி விதைப்பு செய்யப்பட்ட நெற்பயிர்கள் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. சில இடங்களில் விதைப்பு செய்யப்பட்டு முளைக்காமல் இருந்த நிலையில் தற்போது பெய்து வரும் மழைக்கு பிறகு முளைக்க தொடங்கி உள்ளது. கை நடவுக்கு என விதை விடப்பட்டு 50 நாட்களை கடந்த நிலையில் சம்பா நடவு மேற்கொள்வது கேள்விக்குறியாக இருந்தது. தற்போது பெய்துவரும் மழையின் காரணமாக உழவு மற்றும் நடவு பணி தீவிரமாக நடைப்பெற்று வருகிறது.

**கொள்ளிடம் பகுதியில் பருவமழை துவங்கியதால் விவசாயிகள் மகிழ்ச்சி**

கொள்ளிடம்: கொள்ளிடம் பகுதியில் பருவமழை பெய்ய துவங்கியதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். கொள்ளிடம் பகுதியில் இந்தாண்டுக்கான சம்பா சாகுபடிக்கு மழையையும் மேட்டூர் தண்ணீரையும் நம்பி விவசாயிகள் காத்திருந்தனர். ஆனால் இரண்டும் விவசாயிகளுக்கு ஏமாற்றத்தையே கொடுத்தது. இதனால் நேரடி விதைப்பு செய்ய முடிவு செய்து கொள்ளிடம்

பகுதியில் 6461.43 எக்டேர் நிலப்பரப்பில் நேரடி சம்பா நெல் விதைப்பு செய்தனர். நேரடி விதைப்பு செய்து சிலர் ஒரு மாதம் கடந்தும், சிலர் 2 மாதம் கடந்தும் தண்ணீருக்காக காத்திருந்தனர். ஆனால் தண்ணீர் இல்லாமல் விதைப்பு செய்த விதை முளைக்கவில்லை. சில வயல்களில் மட்டுமே பாதியளவு முளைத்து அதுவும் கருக ஆரம்பித்தது.

இந்நிலையில் விவசாயிகள் விதைப்பு செய்த அனைத்து நெல் விதைகளும் வீணாகி விட்டதாக நினைத்து வருந்தினர். இந்நிலையில் நேற்று முன்தினம் முதல் மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து கொள்ளிடம் விவசாயிகள் சங்க கூட்டமைப்பு தலைவர் சிவப்பிரகாசம்பிள்ளை கூறுகையில், கொள்ளிடம் பகுதியில் தண்ணீர் கிடைக்காததால் நேரடி விதைப்பு செய்து மழைக்காக விவசாயிகள் காத்திருந்தனர். ஆனால் எதிர்பார்த்ததுபோல மழை பெய்யாததால் விவசாயிகள் வேதனையில் இருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் முதல் பெய்து வரும் லேசான மழையால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். காலம் தாழ்த்தி பருவமழை துவங்கினாலும் போதிய மழை பொழிவு இருந்தால் அனைத்து நேரடி விதைப்பும் முளைக்க ஆரம்பித்துவிடும். எனவே போதிய மழையை எதிர்பார்க்கிறோம். இதேபோல் கொள்ளிடம் பகுதியில் மின்மோட்டார் மற்றும் டீசல் என்ஜினை கொண்டு சம்பா நடவு பயிரை 2808.86 எக்டேரில் நடவு செய்துள்ள பயிர்களுக்கும் தண்ணீர் பற்றாக்குறை இருக்காது என்றார்.

## திருப்புகலூரில் மர சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி

நாகை: திருமருகல் ஒன்றியம் திருப்புகலூர் கிராமத்தில் மாவட்ட வனத்துறை, சிக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் விவசாய ஆர்வலர்கள் குழு கூட்டம், மர சாகுபடி குறித்த தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது. பயிற்சியை மாவட்ட வன அலுவலர் திவ்யா துவக்கி வைத்தார். வேளாண் அறிவியல் நிலைய செயல்பாடு, பயிற்சியின் முக்கியத்துவம் குறித்து வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் அனுராதா பேசினார்.

விவசாயிகள் தங்கள் நிலத்துக்கு எவ்வாறு தகுந்த மரப்பயிர்களை தேர்வு செய்வது, குறுகியகால மரப்பயிர்களான சவுக்கு, மலைவேம்பு, தைல மரம் ஆகியவற்றை வளர்ப்பது, நீண்டகால மரப்பயிர்களான தேக்கு, வேங்கை, மகாஹனி மரங்கள் வளர்ப்பு, நாட்டு மரங்களான வேம்பு, வாகை, நாட்டு கருவேல் வளர்ப்பு, அதற்கான விற்பனை வாய்ப்பு, சந்தனமரம், செஞ்சந்தனம் மரங்களை வளர்க்கலாமா, அதற்கு அரசாங்கத்திடம் பெற வேண்டிய அனுமதி குறித்து வேளாண் அறிவியல் நிலைய வனவியல் உதவி பேராசிரியர் ரவி விளக்கினார்.

மேலும் விவசாயிகள் அதிகப்படியான மரங்களை வளர்ப்பதால் அவர்கள் பயன்பெறுவதுடன் வளி மண்டலத்தில் உள்ள அதிகப்படியான கரியமில வாயுவை குறைக்க உறுதுணையாக இருக்கும் என்றார். காய்கறி பயிர் வளர்ப்பு குறித்து தோட்டக்கலை உதவி பேராசிரியர் தமிழ்செல்வன் பேசினார். மனையியல் உதவி பேராசிரியர் செல்வி நன்றி கூறினார். பயிற்சியில் திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர். கூட்டத்தில் வனத்துறை வனச்சரகர்கள் கோபிநாத், சரவணன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## தலைகாட்டியது பருவமழை கடலை விவசாயம் தீவிரம்

ஆண்டிபட்டி, : ஆண்டிபட்டி மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் மானாவாரி நிலக்கடலை விவசாயம் தீவிரமாக நடந்து வருகிறது.ஆண்டிபட்டி மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் தெப்பம்பட்டி, ராசதானி, கதிர்நரசிங்கபுரம், ராமலிங்கபுரம், பாலக்கோம்பை, வேலப்பர்கோவில் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. கடந்த சில நாட்களாக இப்பகுதியில் சாரல் மழை விட்டு விட்டு பெய்து வருகிறது. மானாவாரியாக நிலக்கடலை பயிரை இப்பகுதி விவசாயிகள் 500 க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பில் பயிரிட்டுள்ளனர். கடந்த 15 நாட்களுக்கு முன்பு பயிரிட்ட நிலக்கடலை பயிர் தற்போது நன்கு வளர்ந்துள்ளது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் செடிகள் நன்றாக வளர்ந்து வருகின்றன. இதையடுத்து ஆண்டிபட்டி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். விவசாயிகள் கூறுகையில், ‘‘தற்போது பருவமழை பெய்து வருகிறது. மழை தொடர்ந்து கைகொடுக்கும் என்று நினைக்கிறோம். அப்படி மழை பெய்தால்

பயிர்கள் செழித்து வளர்ந்துவிடும். நாங்களும் நல்ல அறுவடையை பார்த்துவிடுவோம். எனவே மழை தொடர்ந்து பெய்ய வேண்டும்'' என்றனர்.

## செய்நேர்த்தி மூலம் பருத்திக்கு கூடுதல் விலை பெறலாம்அகற்ற பொதுமக்கள் வலியுறுத்தல்

சின்னமனூர், : பருத்தி, மிளகாய்க்கு கூடுதல் விலை கிடைக்க மேற்கொள்ள வேண்டிய செய்நேர்த்தி தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்துறை விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.பருத்தி, மிளகாய் போன்றவற்றை அறுவடை செய்து அப்படியே விற்பனைக்கு கொண்டு செல்வதால் விலை குறைவாக கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. சில செய்நேர்த்தி தொழில்நுட்பங்களை மேற்கொள்வதின் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் கிடைக்கும்.பருத்தியைப் பொறுத்தளவில் சுத்தத்தன்மை, நிறம், மென்மை, குறைவான ஈரம் ஆகிய நான்கும் விலையை தீர்மானிக்கும். எனவே நன்குமலர்ந்த பருத்தியை மட்டும் செடியில் இருந்து பறிக்க வேண்டும். மூன்று அல்லது நான்கு தினங்களுக்கு ஒருமுறை பருத்தியை பறிக்கலாம்.

காலைநேரங்களில் பறிப்பது சிறந்தது. அப்போதுதான் காய்ந்த இலை, சருகுகள் பருத்தியில் ஒட்டாது. சேகரித்த பருத்தியை நிழல்,மணல் பரப்பியகளங்களில் காயப்போட வேண்டும். நேரடி வெயிலில் உலரவைத்தால் பஞ்சின்நிறம் குறைந்துவிடுவதுடன் மென்மைத்தன்மையும் பாதிக்கும்.பின்பு நன்கு உலர்த்தி, சருகுகள், பூச்சிநோய்தாக்கியது, கொட்டைகளை உள்ளிட்டவற்றை அகற்ற வேண்டும். தொடர்ந்து காற்றோட்டமான அறைகளில் மணல் பரப்பிய தரையில் சேமிக்க வேண்டும். பருத்தியை ரகம்வாரியாக தனித்தனியாகச் சேமிப்பது நல்லது.மிளகாய்: மிளகாயில் பூஞ்சாணக் கொல்லிகள் தெளித்து பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். மிளகாய்செடியில் பழங்கள் முழுவதும் சிவப்புநிறமாக மாறியவுடன் பறிக்கலாம். பழங்களைப் பறித்த அன்றே காயப்போட வேண்டும். மணல் பரப்பிய களங்கள் இதற்கு ஏற்றது. மிதமான வெப்பநிலையில் காலையிலும், மாலையிலும் நான்கு நாட்கள் காயப்போட வேண்டும். இரவில் மிளகாய் பனியால் பாதிக்கப்படாமல் இருக்க பழங்கள் மீது இலேசான படுதாவைப்போட்டு மூடி வைக்கலாம்.

மிளகாய் வற்றல் சிவப்புநிறமாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.தவறான சேமிப்பு முறையில் வற்றல் கருப்புநிறமாக மாறினால் நல்லவிலைக்கு விற்கமுடியாது.மிளகாய் வற்றலை சந்தைக்கு கொண்டு செல்லும்போது சாக்கு அமுக்கக்கூடாது. இதனால் வத்தல் உடைந்து எதிர்பார்த்த

விலை கிடைக்காமல் போகலாம் என்று வேளாண்மைத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது.

## போடி அருகே தடுப்பணை பணி தீவிரம்

போடி, : போடி அருகே முந்தல், தீர்த்ததொட்டி பகுதிகளில் கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே ரூ. 2.50 கோடியில் கட்டப்படும் தடுப்பணை பணிகள் தீவிரமடைந்துள்ளன.தமிழகத்தையும் கேரளாவையும் இணைக்கும் வகையில் மேற்கு தொடர்ச்சி மலையில் போடிமெட்டு மற்றும் குரங்கனி உள்ளது. இப்பகுதியில் உருவாகும் கொட்டக்குடி ஆறு போடி, தேனி வழியாக வைகை அணையை அடைகிறது.

இந்த ஆறு மூலம் குரங்கனி மலைப்பகுதியில் காப்பி, மிளகு, மா, பலா, தென்னையும், முந்தல் அருகில் கோடாங்கிபட்டி, பூதிப்புரம் உள்ளிட்ட பகுதிகளில் தென்னை மற்றும் கரும்பு விவசாயம் நடந்து வருகிறது. பாசன கிணறுகளின் நீர்மட்டம் உயரவும் பெரிதும் உதவுகிறது. அப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் வகையில் தடுப்பணைகள் கட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதன்பேரில் போடி அருகே முந்தல் பாட்டக்களம் பகுதியில் ரூ. 2.50 கோடி மதிப்பில் 2 தடுப்பணைகள் கட்டும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இதனால் இப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## செய்நேர்த்தி மூலம் பருத்தி,மிளகாய்க்கு கூடுதல் விலை

இளையான்குடி, : பருத்தி, மிளகாய்க்கு கூடுதல் விலை கிடைக்க மேற்கொள்ள வேண்டிய செய்நேர்த்தி தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்துறை விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.பருத்தி,மிளகாய் போன்றவற்றை அறுவடை செய்து அப்படியே விற்பனைக்கு கொண்டு செல்வதால் விலை குறைவாக கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. சில செய்நேர்த்தி தொழில்நுட்பங்களை மேற்கொள்வதின் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் கிடைக்கும்.

பருத்தியைப் பொறுத்தளவில் சுத்தத்தன்மை, நிறம், மென்மை, குறைவான ஈரம் ஆகிய நான்கும் விலையை தீர்மானிக்கும். எனவே நன்குமலர்ந்த பருத்தியை மட்டும் செடியில் இருந்து பறிக்க வேண்டும். மூன்று அல்லது நான்கு தினங்களுக்கு ஒருமுறை பருத்தியை பறிக்கலாம்.

காலைநேரங்களில் பறிப்பது சிறந்தது. அப்போதுதான் காய்ந்த இலை, சருகுகள் பருத்தியில் ஒட்டாது. சேகரித்த பருத்தியை நிழல்,மணல் பரப்பியகளங்களில் காயப்போட வேண்டும். நேரடி வெயிலில் உலரவைத்தால் பஞ்சின்நிறம் குறைந்துவிடுவதுடன் மென்மைத்தன்மையும் பாதிக்கும்.பின்பு நன்கு உலர்த்தி, சருகுகள், பூச்சிநோய்தாக்கியது, கொட்டைகளை உள்ளிட்டவற்றை அகற்ற வேண்டும். தொடர்ந்து காற்றோட்டமான அறைகளில் மணல் பரப்பிய தரையில் சேமிக்க வேண்டும். பருத்தியை ரகம்வாரியாக தனித்தனியாகச் சேமிப்பது நல்லது.

மிளகாய்: மிளகாயில் பூஞ்சாணக் கொல்லிகள் தெளித்து பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டும். மிளகாய்செடியில் பழங்கள் முழுவதும் சிவப்புநிறமாக மாறியவுடன் பறிக்கலாம். பழங்களைப் பறித்த அன்றே காயப்போட வேண்டும். மணல் பரப்பிய களங்கள் இதற்கு ஏற்றது. மிதமான வெப்பநிலையில் காலையிலும், மாலையிலும் நான்கு நாட்கள் காயப்போட வேண்டும். இரவில் மிளகாய் பனியால் பாதிக்கப்படாமல் இருக்க பழங்கள் மீது இலேசான படுதாவைப்போட்டு மூடி வைக்கலாம்.

மிளகாய் வற்றல் சிவப்புநிறமாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.தவறான சேமிப்பு முறையில் வற்றல் கருப்புநிறமாக மாறினால் நல்லவிலைக்கு விற்கமுடியாது. மிளகாய் வற்றலை சந்தைக்கு கொண்டு செல்லும்போது சாக்கு அமுக்கக்கூடாது. இதனால் வத்தல் உடைந்து எதிர்பார்த்த விலை கிடைக்காமல் போகலாம் என்று வேளாண்மைத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது.

## வாழையில் கன்று நேர்த்தி செய்யும் செயல் விளக்கம்

நாகர்கோவில்: கிள்ளிக்குளம் வேளாண்மை கல்லூரி 4ம் ஆண்டு மாணவர்கள் கிராமப்புற வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் தக்கலை வட்டாரத்தில் தங்கி விவசாயிகளுடன் களப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக கொல்லன்விளையில் விவசாயி குமாரசாமி பிள்ளை என்பவர் தோட்டத்தில் வாழையில் சூடோமானல் பயன்படுத்தி கன்று நேர்த்தி செய்வது பற்றி விவசாயிகளுக்கு செயல்விளக்க பயிற்சி அளித்தனர். இதில் விவசாய கல்லூரி மாணவர்கள் சின்ஜித், பிரபு, சதீஷ்குமார், சண்முகம், ராஜசேகர், ரவிக்குமார், சமீர்அகமது ஆகியோர் கலந்து கொண்டனர்.